## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

## திருவாரூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(15.03.2023 முதல் 19.03.2023)

**அறிக்கைஎண்: 21/2023** **தேதி: 14.03.2023**

### திருவாரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 - 34 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 - 25 °செ ஆகவும் பதிவானது.

### திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (15.03.2023 முதல் 19.03.2023).

| கடந்தவாரவானிலை (10.03.2023 முதல் 13.03.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (15.03.2023 முதல் 19.03.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 10/03 | நாள்-2 11/03 | நாள்-3 12/03 | நாள்-3 13/03 | தேதி | நாள்-1 15/03 | நாள்-2 16/03 | நாள்-3 17/03 | நாள்-4 18/03 | நாள்-5 19/03 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 1 | 1 | 1 | 1 |
| 34 | 33 | 33 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 34 | 34 | 34 |
| 24 | 24 | 24 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 24 | 24 | 24 |
| 5 | 5 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 1 | 3 | 2 | 5 | 5 |
| 70-60 | 70-61 | 70-62 | 69-62 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-40 | 90-50 | 90-50 | 90-50 | 90-50 |
| 4 | 5 | 5 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 | 4 | 6 | 8 | 6 |
| கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு வட மேற்கு | வட மேற்கு | மேற்கு வட மேற்கு | வடக்கு |

### திருவாரூர் மாவட்டத்திற்கானவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டமின்றி தெளிவாக காணப்படும். 16.03.2023 முதல் 19.03.2023 ஆகிய தினங்களில் குறைந்த அளவு துரல் எதிர்பாபார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 – 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 – 25 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 – 8 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு வட மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் தரிசு | உளுந்து | நெல் தரிசு பயறுவகைப் பயிர்களுக்கு பூக்கும் தருணத்திலும், அடுத்து 15 நாட்கள் இடைவெளியிலும் டிஏபி (2 சதம்) + முரியேட் ஆப் பொட்டாஷ் (1 சதம்) கரைசலை காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். டிஏபி கரைசலுக்கு பதிலாக "பயறு அதிசயம்" எக்டருக்கு 5.0 கிலோ என்ற அளவில் மொட்டு வைக்கும் தருணத்தில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும் |
| பருத்தி | | நெல் தரிசுப் பருத்திக்கு 45-ம் நாள் ஒரு களை எடுத்துவிட்டு 3 நாட்கள் கழித்து உரமிட்டு மண் அணைத்து நீர் பாய்ச்சவும். |
| கால்நடைகளுக்கு | கன்று | 3 மாத வயதுடைய கன்று குட்டிகள் மற்றும் 2 மாத வயதுடைய ஆட்டு குட்டிகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும். |

## குறுஞ்செய்தி

நெல் தரிசுப் பருத்திக்கு 45-ம் நாள் ஒரு களை எடுத்துவிட்டு 3 நாட்கள் கழித்து உரமிட்டு மண் அணைத்து நீர் பாய்ச்சவும்.

**இயக்குநர்**